**தேங்காய் மற்றும் கொப்பரையின் விலை அதிகரிக்க வாய்ப்பில்லை**

இந்தோனேஷியா, பிலிப்பைன்ஸ் நாடுகளுக்கு அடுத்து மொத்த தேங்காய் உற்பத்தியில் இந்தியா மூன்றாவது இடத்தை பிடித்துள்ளது. தேசிய தோட்டக்கலை வாரியம் 2017-18 ஆம் ஆண்டின் மூன்றாவது முன்கூட்டிய மதிப்பீட்டின் படி, தேங்காய் 20.79 இலட்சம் எக்டர் பரப்பளவில் பயிரிடப்பட்டு 162.28 இலட்சம் டன்கள் உற்பத்தி செய்யப்படுவதாக அறியப்படுகிறது. இந்தியாவின் மொத்த உற்பத்தியில் கேரளா, தமிழ்நாடு, கர்நாடகா மற்றும் ஆந்திரா ஆகிய மாநிலங்கள் சேர்ந்து 89 சதவீதம் பங்களிக்கின்றது. நாட்டின் தேங்காய் உற்பத்தியில் 28 சதவீதத்துடன் தமிழகம் மூன்றாவது இடத்தை வகிக்கிறது. தமிழ்நாட்டில், கோயம்புத்தூர், திருப்பூர், தஞ்சாவூர், திண்டுக்கல் மற்றும் கன்னியாகுமரி ஆகியவை தேங்காய் உற்பத்தி செய்யும் முக்கிய மாவட்டங்களாகும்.

தேங்காய் மற்றும் தேங்காய் பொருட்களை ஐக்கிய அரபு நாடுகள், ஐக்கிய நாடுகள், குவைத் மற்றும் ஈரான் ஆகிய நாடுகளுக்கு அதிகளவு ஏற்றுமதி செய்யப்படுகிறது. வர்த்த மூலங்களின்படி, கர்நாடகா வரத்து டிசம்பர் மாதம் வரை நீடிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. தேங்காய் எண்ணெய் விலை குறைவிற்கு காரணம் தொழிற் நிறுவனங்களின் தேவைக் குறைவு, குறைந்த உள்ளூர் நுகர்வு, குறைவான ஏற்றுமதி மற்றும் மலிவான உணவு எண்ணெய் இறக்குமதி ஆகியன ஆகும். எனவே, தற்போதைய கையிருப்பிலுள்ள தேங்காய் மற்றும் கொப்பரையின் விலை குறைவிற்கு காரணமாகிறது.

இச்சூழலில், விவசாயிகள் விற்பனை முடிவுகளை எடுக்க ஏதுவாக, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் இயங்கி வரும் தமிழ்நாடு பாசன விவசாய மேம்பாட்டு திட்டத்தின் படி கீழ் இயங்கி வரும், வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தின் விலை முன்னறிவிப்புத் திட்டம், கடந்த 18 ஆண்டுகளாக ஈரோட்டில் உள்ள அவல் பூந்துறை ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் நிலவிய தேங்காய் மற்றும்

கொப்பரையின் விலை மற்றும் பெருந்துறை கூட்டுறவு விற்பனை மையத்திலும் சந்தை ஆய்வுகள் மேற்கொண்டது. ஆய்வு முடிவின் அடிப்படையில் நவம்பர் - டிசம்பர் , 2018 வரை தரமான தேங்காயின் பண்ணை விலை ரூ.14 முதல் ரூ.15,-வரை மற்றும் நல்ல தரமான கொப்பரை கிலோவுக்கு ரூ. 85,-முதல் ரூ.90,-ஆகவும் இருக்கும். எனவே, விவசாயிகள் மேற்கூறிய சந்தை ஆலோசனை அடிப்படையில் விற்பனை முடிவுகளை எடுக்குமாறு பரிந்துரைக்கப்படுகின்றனர்.


**மேலும் விவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்**

உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம்

வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம்

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்

கோயம்புத்தூர்-641 003

தொலைபேசி -0422-2431405

**தொழில்நுட்ப விவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்**

பேராசிரியர் மற்றும் தலைவர்

வாசனை மற்றும் மலைத்தோட்ட பயிர்கள்துறை

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்

கோயம்புத்தூர்-641 003.

தொலைபேசி எண் -0422-6611284